27th July 1965]

இல்லை. ஸ்டேஸி ஒரு அன்னியர். அவரை எப்படி நடத்துவது என்பதைக் குறித்து மத்திய அரசாங்கத்தோடும், பிரிட்டிஷ் ஹை கமிஷனர் அலுவலகத்தோடும் கலந்தாலோசித்து இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.

**பென்ஷனர்களுக்கு அகவிலைப்படி**

* 2 கேள்வி.—திரு. செ. மாதவன் : திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பென்ஷனர்களுக்குத் தரப்படும் அகவிலைப்படியை உயர்த்தும் திட்டம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

**திரு. செ. மாதவன்:** பஞ்சப் படியை மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும், மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொண்டாவது, பென்ஷனர்களுக்கு அளிக்கப்படும் பென்ஷன் தொகையைக் குறித்துப் பரிசிலனை செய்து, 'ரிவைஸ்டு ஸ்கேல் ஆப் பென்ஷன்' நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு உத்தேசம் இல்லை.

**திரு. மு. சண்முகம்:** இருபது ரூபாய்க்கும் குறைவாகப் பென்ஷன் பெறும் ஓய்வுபெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சம் இருபது ரூபாயாவது பென்ஷன் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையின் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன? அப்படிப்பட்ட கோரிக்கை உடனடியாகக் கவனிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில், இருபது ரூபாய் குறைந்த பட்சப் பென்ஷன் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் பள்ளிகளிலே உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அது பொருந்தும். ஆனால், எய்டெட்-ஸ்கூல்களில் வேலை செய்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தான் இதைக் கோருகிறார்கள். அது மறுபடியும் பரிசிலனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்பொழுது அரசினரால் வழங்கப்படுகிற முதியோர் பென்ஷன் தொகையைவிட, பல ஆண்டுக் காலம் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் மிகக் குறைவாக இருப்பதால், இருபது ரூபாய்க்கு மேலாவது பென்ஷன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி தான் சற்று முன்பு நான் விடை அளித்தேன். சர்க்கார் பள்ளிகளிலே வேலை செய்த ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் குறைந்தபட்ச பென்ஷன் இருபது ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்

கிறது. தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகளில் வேலை செய்து ஓய்வு பெறும் ஆசிரியர்களைப் பொறுத்து, இதுவரையில் அதற்கு உத்தரவு போடவில்லை. அது பரிசிலனையில் இருக்கிறது. தனிப்பட்டவர் நடத்துகிற பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், சர்க்காரப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று பென்ஷன் கொடுக்க வேண்டுமென்றால், அதில் தனிப்பட்ட பள்ளி நிர்வாகிகளுக்கும் கொஞ்சம் பொறுப்பு இருக்கிறது. அதை அவர்களும் உணரவேண்டும் என்று தான் அவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அரசாங்கத்தின் கீழ் முப்பது ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்து, பிறகு ரிடையராகி அதற்குப் பிறகு 15, 20 ஆண்டுகள் உயிரோடு இருக்கும் துர்ப்பாக்கியமான பென்ஷனர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு அளிக்கப்படும் பென்ஷன் தொகை மாற்றியமைக்கப்படாமலேயே இருக்கிறது. உதாரணமாக, ஒருவர் பதவியிலிருந்து விலகும்போது 100 ரூபாய் பென்ஷன் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்குமானால், 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அதே 100 ரூபாய் என்று இருக்கிறது. அன்றைய 100 ரூபாய் இன்றைக்குப் 17 ரூபாய் மதிப்புள்ளதாகத் தான் இருக்கிறது. ஆக, அவர்களுடைய பென்ஷன் விகிதத்தை மாற்றியமைக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டா ? இல்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு இந்த அரசாங்கம் பரிசிலனை செய்வது இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** பென்ஷன் வாங்குபவர்களுக்குப் பஞ்சப்படி நிர்ணயம் செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இப்போதுள்ள அகவிலையை உத்தேசித்து, அவர்களுடைய பஞ்சப்படி உயர்த்தப்படவில்லை. 'கொடுப்பதற்கில்லை' என்று சொல்லிக் கொண்டிருப்பதை முதல் அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டு, நிலைமையை மறு பரிசிலனை செய்து பஞ்சப் படியை உயர்த்துவதற்கு முயற்சிப்பாரா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அக விலையையொட்டி ஓரளவு பென்ஷன் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை என்று தான் கூறினேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனியார்த் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட மன்றங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தனியார்த் துறையில் சேர்கிறார்களா ? அல்லது, அரசாங்கத் துறையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளில் வேலை செய்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படவில்லை.